**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 15.10.2026
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் டிராக்டர் மற்றும் வேளாண் இயந்திரங்களில் ஏற்படும் விபத்துகள் குறித்த தேசிய விழிப்புணர்வு கூட்டம்

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், வேளாண்மை பொறியில் கல்லுரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் பண்ணை இயந்திரவியல் மற்றும் சக்திப் பொறியியல் துறையின் கீழ் இயங்கும் அனைத்து இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டத்தின் மூலம் மைராடா வேளாண் அறிவியல் மையத்துடன் இணைந்து, ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், இச்சிப்பாளையம் கிராமத்தில் 14.10.2026 அன்று டிராக்டர் மற்றும் வேளாண் இயந்திரங்களில் ஏற்படும் விபத்துகள் குறித்த தேசிய விழிப்புணர்வு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் விவசாயிகள் பண்ணை இயந்திரங்களை இயக்கும் பொழுது கையாள வேண்டிய நடைமுறைகள் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. மேலும் விவசாயிகள் தங்கள் சந்தேகங்களை தெளிவு பெற பண்ணை இயந்திரவியல் துறை சார்ந்த பேராசிரியர்கள் மற்றும் மயிராடா வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கொடுமுடி வட்டார விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தனர்.

இந்த நிகழ்ச்சியில், ஈரோடு, கொடுமுடி, சென்னிமலை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் பண்ணை இயந்திர ஓட்டுனர்கள் கலந்து கொண்டனர். மேலும், இந்நிகழ்ச்சியில், பண்ணை இயந்திரவியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர்.இர.தியாகராஜன் மற்றும் உதவிப்பேராசிரியர் முனைவர்.ச.தம்பிதுரை, மயிராடா வேளாண்மை அறிவியல் நிலைய வேளாண்மை துறைசார் வல்லுநர் ஜான் பிரபாகர் மற்றும் வேளாண் விஞ்ஞானிகள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியின் முக்கிய நிகழ்வாக விவசாய டிராக்டர்கள், டிரெய்லர்கள் மற்றும் மெதுவாகச் செல்லும் வாகனங்களின் பின்புறத்தில் ஒட்டப்படும் பிரதிபலிப்புத் திறன் கொண்ட எச்சரிக்கைச் சின்னம் டிராக்டர் உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுனர்களுக்கு வழங்கப்பட்டது.

விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பண்ணை இயந்திரவியல் மற்றும் சக்திப் பொறியியல் துறைப் பேராசிரியர்கள் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் சரியான முறையில் விளக்கம் அளித்தனர். மேலும், வேளாண்மையில் பண்ணை இயந்திரமாக்கல் மற்றும் மஞ்சள் மற்றும் மரவள்ளி சாகுபடியில் இயந்திரமயமாக்கல் தொடர்பான தொழில்நுட்பங்கள் குறித்த கேள்விகளுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டது.

***மக்கள் தொடர்பு அலுவலர்***